**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**

**வெள்ளிக் கிழமை பிரசங்கம்**

**29 ஜூலை 2016 / 24 ஷவ்வால் 1437**

# "ஹிக்மா" வின் மூன்றாவது தூண் "அல்-அனாஹ்" ஆகும்

اَلْحَمْدُ للهِ الَّذِي أَحَاطَ بِكُلِّ شَيْءٍ عِلْمًا وَقَضَى بِمَا يُرِيْدُ حِكْمَةً
وَ حُكْماً، أَنْعَمَ بِالنِّعَمِ ابْتِلاَءً وَامْتِحَانًا، وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللّهُ
وَحْدَهُ لاَ شَرِيْكَ لَه ذُوْ الْجَلاَلِ وَالإِكْرَامِ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا
مُحَمَّداً عَبْدُه وَرَسُوْلُهُ أَفْضَلُ الأَنَامِ وَ مِصْبَاحُ الظَّلاَمِ، اَللَّهُمَّ
صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَ عَلَى آلِه وَصَحْبِه وَسَلِّمْ تَسْلِيْماً
كَثِيْرًا .أَمَّا بَعْدُ فَيَا أَيُّهَا النَّاسُ اتَّقُوْا اللّهَ حَيْثُ مَا كُنْتُمْ، فَإِنَّ اللهَ
يَعْلَمُ سِرَّكُمْ وَ عَلاَنِيَّتَكُمْ

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான நமது "தக்வா" (பக்தியை) நமது உள்ளங்களில் உளப்பூர்வமாக நிரப்பிக் கொள்வோமாக! அல்லாஹ்வுக்கும் அவனது கட்டளைகளுக்கும் அடிபணிந்து நடப்பதை

அதிகரித்துக் கொள்ள கடின முயற்சி செய்வோமாக! அல்லாஹ்வின் கோபத்துக்குக் காரணமாகும் செயல்களைச் செய்வதை விட்டும் தவிர்ந்து கொள்வோமாக! ஷவ்வால் மாதத்தின் இந்த கடைசி வெள்ளிக்கிழமை தினத்தில் வல்லமைமிக்க அல்லாஹ்வுடனான நமது தொடர்பும் மற்ற மனிதர்களுடனான நமது தொடர்பும் தொடர்ந்து உறுதியாக இருக்கும் என நம்புகிறோம். ஆமீன்.

ஜமாஅத்தார்களே!

எல்லா வகையிலும் முன்னேறி விட்ட தற்கால உலகில், குறுகிய நேரத்தில் எத்தனையோ விஷயங்களை நம்மால் செய்து முடிக்க முடிகின்றது. முற்காலத்தில், அதிக நாட்கள் பயணித்து சென்றடைய முடிகின்ற நாடுகளுக்கு, இன்று, மிகக் குறுகிய காலங்களில் நம்மால் பயணம் செய்து செல்ல முடிகின்றது. மேலும், தற்காலத்தில் கல்வியும் தகவல்களும் மிகப் பெரிய அளவில் பரப்ப முடிகின்றதென்பதால் ஹதீதுகளைத் தேடும் முயற்சிகள் மிகவும் எளிதாகியுள்ளன. கடந்த காலத்தில், ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் ஒரு ஹதீதைத் தெரிந்து கொள்வதற்காக, சில நேரங்களில், நீண்ட நாட்களாக அதிக தொலை தூரங்களுக்குப் பயணம் செய்ய வேண்டிய நிலை அறிஞர்களுக்கு இருந்தது. இவ்விதமான முன்னேற்றம் ஒரு ஆக்கப்பூர்வமான முன்னேற்றம் தான் என்பதை மறுக்க முடியாது. எனினும், ஒவ்வொரு விஷயத்தையும் கண்ணை மூடி விழிப்பதற்குள் நாம் அடைந்து விட முடியுமா? என்ற கேள்வி இங்கு எழுகிறது.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களுக்கு திருக்குர்ஆன் வசனங்கள் பல கால கட்டங்களில் படிப்படியாக ஏன் அருளப்பட்டது என்பதை நாம் சிந்தித்துப் பார்த்தோமா? ஒரே காலத்தில் அனைத்து வசனங்களும் அருளப்பட்டிருக்க முடியும் என்றிருக்க, ஏன் பல கால கட்டங்களில் அருளப்பட்டன?

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவினால் பிரபஞ்சம் அனைத்தையும் கண்ணை மூடி விழிப்பதற்குள் படைத்திருக்க முடியும் என்றிருக்க, பிரபஞ்சத்தை அல்லாஹ் ஏன் பல கால கட்டங்களில் படைத்தான் என்பதைப் பற்றி நாம் சிந்தித்துப் பார்த்தோமா? வானங்களையும் பூமியையும் அல்லாஹ் ஆறு காலகட்டங்களில் படைத்தான் என திருக்குர்ஆனின் ”ஹூத்” எனும் அத்தியாயத்தின் 7-வது வசனத்தில் பின்வருமாறு கூறப்படுகிறது:

وَهُوَ الَّذِي خَلَقَ السَّمَاوَاتِ وَالْأَرْضَ فِي سِتَّةِ أَيَّامٍ وَكَانَ عَرْشُهُ عَلَى الْمَاءِ لِيَبْلُوَكُمْ أَيُّكُمْ أَحْسَنُ عَمَلًا ۗ وَلَئِن قُلْتَ إِنَّكُم مَّبْعُوثُونَ مِن بَعْدِ الْمَوْتِ لَيَقُولَنَّ الَّذِينَ كَفَرُوا إِنْ هَٰذَا إِلَّا سِحْرٌ مُّبِينٌ

பொருள்: மேலும், அவன்தான் வானங்களையும், பூமியையும் ஆறு நாட்களில் படைத்தான்; அவனுடைய அர்ஷு நீரின் மேல் இருந்தது. உங்களில் யார் அமலில் (செய்கையில்) மேலானவர் என்பதைச் சோதிக்கும் பொருட்டு (இவற்றைப் படைத்தான்; இன்னும் நபியே! அவர்களிடம்)

“நிச்சயமாக நீங்கள் மரணத்திற்குப் பின் எழுப்பப்படுவீர்கள்” என்று நீர் கூறினால், (அதற்கு அவர்களிலுள்ள நிராகரிப்பவர்கள்) கா.ஃபிர்கள், “இது தெளிவான சூனியத்தைத் தவிர வேறில்லை” என்று நிச்சயமாகக் கூறுவார்கள்.

திருக்குர்ஆன் வசனங்கள் பல காலகட்டங்களில் அருளப்பட்டதற்கும், வானங்களும் பூமியும் பல காலகட்டங்களில் படைக்கப்பட்டதற்கும் பின்னணியில் உள்ள ”ஹிக்மத்” ( விவேகம், நுட்பமான) விஷயங்களில் ஒன்று, மனிதர்கள் தமது செயல்களில் அவசரப்படக் கூடாது என மனிதர்களுக்குப் போதிப்பதாகும். இதற்குத் தான் ”அல்-அனாஹ்” என்று அரபியில் கூறப்படுகிறது.

நமது முயற்சிகளின் விளைவுகளை நாம் விரைவில் காண வேண்டுமென்ற ஆர்வத்தில், சிலவேளைகளில், சில விஷயங்களின் மூலம் தீவிரமாக முயற்சிக்கின்றோம். ஆனால், நமது எல்லா நோக்கங்களையும் குறுகிய காலத்தில் அடைந்து விட முடியாது என்பதை நாம் அறிவது அவசியமாகும். இப்போது தான் நடப்பட்டுள்ள ஒரு மரத்திலிருந்து கனிகளை உடனே பறிப்பதென்பது இயலாத விஷயம் ஆகும். இவ்விதமான, அவசரப்படாத வாழ்க்கை முறையைத் தான் ஒவ்வொரு மனிதரும் அனுபவிக்க வேண்டும்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

நமது வாழ்வில் நாம் பின்பற்ற முடிகின்ற மூன்று செயல்முறைகளை உங்கள் முன் எடுத்துரைக்க விரும்புகிறேன். அம்மூன்று செயல்பாடுகளும்,

நம்மில் ”அல்-அனாஹ்” (அமைதி) எனப்படும் நன்னடத்தையை ஏற்படுத்திக் கொள்ள நமக்கு உதவியாக இருக்கும்.

**முதலாவது செயல்பாடு**, சில விஷயங்களை நாம் படிப்படியாக (ததர்ருஜ்) செயல்படுத்த முயற்சிக்க வேண்டும். நமது குடும்ப உறுப்பினர்களிலும் நமது தொழிற்கூடங்களிலும் ஆக்கப்பூர்வமான மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என நாம் அனைவரும் விரும்புகிறோம். ஆனால் மாற்றங்கள் படிப்படியாகத் தான் நிகழும் என்பதை நாம் உணர வேண்டும்.

மிகச் சிறந்த தலைவர், கலீ்ஃபா உமர் பின் அப்துல் அஜீஸ் (ரஹ்) பற்றி ஒரு வரலாறு உள்ளது. ஒருமுறை, அவர்களின் மகனார், நாட்டின் அரசியல் மற்றும் ஆட்சியையும், சமூக சம்பந்தமான விவகாரங்களையும் உறுதிப்படுத்துவதற்கான, தகப்பனார் உமர் பின் அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களின் முயற்சிகள் தாமதமாக நடைபெறுவதாக உணர்ந்தார். எனவே, அவர் தகப்பனாரிடம்: ”தகப்பனார் அவர்களே! ஏன் நீங்கள் மாற்றங்களை உடனடியாகச் செயல்படுத்துவதில்லை?” எனக் கேட்டார். பின்பு அல்லாஹ்வின் மீது சத்தியமாகக் கூறுகிறேன்; உண்மையைப் பற்றிப் பிடிப்பதற்கான நமது முயற்சிகளில் நாம் இருவரும் அழிந்து போனாலும் நான் அது பற்றிக் கவலை கொள்ள மாட்டேன். எனவே, உண்மையைப் பற்றிப் பிடித்து மாற்றங்களை உடனடியாகச் செயல்படுத்துவது அவசியம் எனவும் கூறினார்.

உமர் பின் அப்துல் அஜீஸ் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் மகனுக்குப் பதிலளிக்கையில்: ”மகனே! அவசரப்படாதே. அல்லாஹ், மதுவினால் ஏற்படும் எதிர் விளைவுகளைப் பற்றி திருக்குர்ஆனில் இரண்டு முறை கூறினான். அதற்குப் பின்பு தான், மதுவைப் பயன்படுத்துவதை விட்டும் தடை செய்தான். உண்மையை உடனே ஏற்றுக் கொள்ளுமாறு மக்களிடம்

கட்டாயப்படுத்தினால் அவர்களும் உடனடியாக உண்மையை மறுத்து விடுவார்களோ என நான் அஞ்சுகிறேன்" எனக் கூறினார்கள்.

செய்யிததினா ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியுள்ள மூன்றாம் அணுகுமுறையைப் பற்றி இங்கு நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். உம்முல் முஃமினீன் ஆயிஷா (ரலி) கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆனில் முதன்முதலாக அருளப்பட்ட வசனங்கள் சொர்க்கம் மற்றும் நரகம் சம்பந்தப்பட்டவையாக இருந்தன. மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதும் "ஹலால்" "ஹராம்" பற்றிய வசனங்கள் அருளப்பட்டன. முதன்முதலாக, "மதுபானம் அருந்தாதீர்கள்" என வசனம் அருளப்பட்டிருந்தால் மக்கள் : "நாங்கள் மதுபானம் அருந்துவதை விட மாட்டோம்" எனப் பதிலளித்திருப்பார்கள். அவ்வாறே, "விபச்சாரம் செய்யாதீர்கள்" என்ற வசனம் முதன்முதலாக அருளப்பட்டிருந்தால், மக்கள்: "விபச்சாரம் புரிவதை விட மாட்டோம்" எனப் பதிலளித்திருப்பார்கள்.

**இரண்டாவது செயல்பாடு**, நாம் மேற்கொள்ள விருக்கும் முயற்சி நமது திறமைகள் மற்றும் சக்திக்கு உட்பட்டவாறு இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் தனது பலம் மற்றும் பலஹீனத்தை அறிந்தவர்களாக உள்ளார்கள். எனவே, முயற்சிகளை மேற்கொள்ள விரும்பும் ஒரு முஸ்லிம், திட்டங்களைத் தேர்ந்தெடுப்பதில் புத்திசாலியாகவும், யதார்த்தமான எதிர்பார்ப்புகளைக் கொண்டவராகவும் இருக்க வேண்டும். அப்போது தான், அவர் விரும்பும் நல்ல விளைவுகளை சரியான நேரத்துக்குள் அவர் அடைய முடியும். உதாரணமாக, சில மக்கள்

மார்க்கத்தைப் பின்பற்றுவதில் திடீரென ஆர்வமிக்கவர்களாக ஆகி விடுகிறார்கள். ஆனால், சன்மார்க்கச் செயல்பாடுகளை ஆர்வத்துடன் பின்பற்ற முயலும் போது பல கஷ்டங்கள் மற்றும் சவால்களை எதிர்கொள்ள வேண்டியது வரும். குடும்பத்தில் பதற்றமும் அமைதியின்மையும் ஏற்படலாம். ஆனால், இஸ்லாத்தின் நோக்கம் இதுவல்ல.

ஜமாஅத்தார்களே!

**நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய மூன்றாவது செயல்பாடு**, ”நாம் அடைய விரும்பும் பலன்களுக்கும் மற்றும் நமது முயற்சியின் காரணமாக ஏற்படும் கஷ்டங்களுக்கும் மத்தியில் அறிவுப்பூர்வமான சமநிலை காணப்பட வேண்டும்” என்பதாகும். நபித்தோழர் அனஸ் பின் மாலிக் (ரலி) அறிவிக்கின்றார்கள்:

நாங்கள் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களுடன் பள்ளிவாசலில் இருந்த போது, திடீரென கிராமவாசியான அரபி ஒருவர் பள்ளியில் நுழைந்து சிறுநீர் கழித்தார். உடனே நபித்தோழர்கள்: ”மஹ்” ”மஹ்” (அதிருப்தியைத் தெரிவிக்கும் அடையாளங்கள்) எனக் கூறினார்கள். அப்போது ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள்: ”அவருக்கு எதிராக சப்தம் போடாதீர்கள்! அவரை சிறுநீர் கழிக்க விடுங்கள்!” என்றார்கள். எனவே, அந்த கிராமவாசி சிறுநீரை முழுமையாகக் கழித்து முடிக்கின்ற வரை அவரைத் தோழர்கள் விட்டு விட்டார்கள். பின்பு, அந்த கிரமாவாசியை தன் பக்கமாக அழைத்த ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள்: ”நிச்சயமாக, பள்ளிவாசல்கள் சிறுநீர் கழிப்பதற்கான இடமில்லை; அசுத்தங்களைக் கொட்டுவதற்கான

இடமுமில்லை. பள்ளிவாசல் அல்லாஹ்வை நினைவுகூறும் இடமாகும். தொழுகை மற்றும் திருக்குர்ஆன் ஓதுவதற்கான இடமாகும்" எனக் கூறினார்கள். பின்பு, ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் தோழர்களில் ஒருவரிடம் தண்ணீர் கொண்டு வருமாறு கூறி, சிறுநீர் கழிக்கப்பட்ட அவ்விடத்தில் ஊற்றுமாறு கூறினார்கள். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் புகாரி ரஹ், இமாம் முஸ்லிம் ரஹ்)

அன்பிற்கினிய ஜமாஅத்தார்களே!

மேற்கண்ட சம்பவத்தை நாம் சிந்தித்துப் பார்க்கும் போது, பள்ளிவாசலை அசுத்தமாக்கி விடக் கூடாது என்பதற்காகவே அந்த கிராமவாசியை நபித்தோழர்கள் சிறுநீர் கழிப்பதை விட்டும் தடுத்தார்கள் என்பதை நாம் மறுப்பதிற்கில்லை. எனினும், அவ்வாறு தடுத்திருந்தால் சிறுநீர் கழித்த அவர் அங்கிருந்து ஓட வேண்டியது வந்திருக்கும். அதன் காரணமாக, சிறுநீர் பள்ளிவாசலின் அதிகமானப் பகுதிகளில் சிந்தியிருக்கும். அது மட்டுமல்ல, அவ்வாறு செய்யப்பட்டிருந்தால் அந்த கிராமவாசிக்கு சிரமம் ஏற்பட்டிருக்கலாம். பள்ளிவாசலில் சிறுநீர் கழிப்பதிலிருந்து தடுப்பதால் ஏற்பட்டிருக்கும் தீய விளைவுகளானது, தொடர்ந்து சிறுநீர் கழிக்க அவர் அனுமதிக்கப்பட்டதினால் ஏற்பட்ட தீய விளைவுகளை விட அதிகமாக இருந்தது. எனவே தான், அந்த கிராமவாசி சிறுநீரை பரிபூரணமாகக் கழித்து முடிக்கும் வரை அவரை விட்டு விடுமாறு ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் தோழர்களுக்குக் கட்டளையிட்டார்கள்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

"ஹிக்மத்" (விவேகம்), "அல்-ஹில்ம்"(கிருபை, சகிப்புத்தன்மை), "அல்-அனாஹ்" (அமைதி) போன்ற சிறப்பான பண்புகளை நம்மில் ஏற்படுத்திக் கொள்வதில் நாம் வெற்றி காண வேண்டுமெனில் நாம் கல்வியறியால் நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வது அவசியமாகும். அதிகமான பல புத்தகங்களைப் படித்து, ஆய்வு செய்வதற்கான நமது முயற்சிகளை அதிகரித்துக் கொள்ள வேண்டும். வாசிப்பதையும் படிப்பதையும் அதிக அளவில் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். அதே சமயம், பயிற்சி பெற்ற, அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்களிடமிருந்து நல்ல வழிகாட்டுதலைப் பெற வேண்டும். எல்லாம் வல்ல அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நமது சொல்லிலும் செயலிலும் "அல்-அனாஹ்" எனும் சிறப்பான பண்பைக் கொண்டு அலங்கரித்துக் கொள்வதை நமக்கு எளிதாக்குவானாக! அவ்வாறு செய்வதன் மூலம் நமது பாசத்திற்குரிய இறைத்தூதர்(ஸல்) அவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றும் ஆற்றலை நாம் பெறுவோம். இன்ஷாஅல்லாஹ்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.